Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.96/2018 Date:29.09.2025
Deposition of witness for prosecution: PW6 திரு. **சின்னமுருகேசன்**
Defence:
Court:

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 29.09.2025 TIME 02.55 **pm**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

விபத்தை ஏற்படுத்திய டிராக்டரை ஓட்டி வந்த ஓட்டுநர் ஆஜர் எதிரி தான். விபத்தில் காயம்பட்ட விஜயராகவன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த தேதியில் எந்த இடத்தில் போலிசார் விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள். மீண்டும் மறுமுறை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் எனக்கு நெருக்கின உறவினர் ஆவார். விபத்து நடந்த இடத்தின் அருகே எனக்கு வயல் இல்லை. விபத்து நடந்த சமயத்தில் வேலை நிமித்தமாக சென்றேன். வாய்க்கால்பட்டி– முருகேசன் வயலுக்கு செல்வதற்காக சென்றேன். விபத்தில் இறந்த நபர் டிராக்டரில் எந்த பகுதியில் அமர்ந்திருந்தார் என்றால் ஓட்டுனருக்கு வலது பக்கம் அமர்ந்திருந்தார். பிற்பகல் 01.00 மணிக்கு வேலைக்கு சென்று மாலை 05.45 மணிக்கு திரும்பினேன். சம்பவ சமயத்தில் நான் ஆட்டுக்கு புல் அறுக்க சென்றேன். சம்பவ இடத்திற்கும், புல் அறுத்து கொண்டிருந்த இடத்திற்கும் இடையே சுமார் 15 அடி தூரம் இருக்கும். விபத்து நடந்த போது அந்த இடத்தில் நான் இல்லை என்றாலும், விபத்தில் இறந்த நபர் எனக்கு உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய டிராக்டரின் பதிவெண் ஞாபகமில்லை. காவல்நிலையத்திற்கு என்னுடன் இருந்த ரவி என்பவர் தகவல் சொன்னார். விபத்து நடந்த இடத்திற்கு சார்பு ஆய்வாளருடன், காவலர்கள் வந்தார்கள். விபத்தை ஏற்படுத்திய டிராக்டரில் உழவு களப்பை இணைக்கப்பட்டுருந்தது. விபத்து நடந்த இடத்திற்கு போலிசார் சுமார் மாலை 05.30 மணியளவில் வந்தார்கள். போலிசாரிடம் சம்பவ இடத்தில் நான் ஒரு கையொப்பம் மட்டும் செய்தேன். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P.Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.